# The BrIdge

I Am The Way - John14:6

ISSUE 2

May - Aug 2018



"So Do Not Fear,
For I Am With You;
Do Not Be Dismayed,
For I Am Your God"

ISAIAH 41:10

"நீ பயப்படாதே,
நான் உன்னுடனே இருக்கிறேன்;
திகையாதே, நான் உன் தேவன்"

ஏசாயா 41:10

BfM
BETHANY
CHURCH
பெத்தானியா தேவாலயம்
බෙතානියා දේවස්ථානය
The family U need

# From the Pastor's Desk

# போதகரின் மேசையிலிருந்து.....

## “பயப்படாதே ! நீ வெட்கப்படுவதில்லை” ஏசாயா 54: 4

### என் அன்பு சகோதர சகோதரிகளே !

ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, முதன் முறையாக இந்த பாலம் எனும் சஞ்சிகையின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் பெரும் உவகையும் அடைகிறேன். பல சவால்களையும் போராட்டங்களையும் கடந்து இதுவரை வெற்றியுடன் நடத்திவந்த கர்த்தர் நம்மைப் பார்த்து பின்வருமாறு கூறுகிறார்.



“பயப்படாதே ! நீ வெட்கப்படுவதில்லை” ஏசாயா 54: 4

“பயப்படாதே என்ற தேவ வார்த்தையானது பரிசுத்த வேதாகமத்தில் 365 தடவைகள் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் ஒவ்வொரு நாளும் ஆண்டவர் நம்மோடு இடைபட்டு அவர் நம்மோடு இருப்பதை உறுதிப் படுத்துகிறார்.

## ஏன் அவர் நம்மைக் குறித்து இத்தனை அக்கறை கொண்டுள்ளார்?

### 1. நாம் அவருக்கு, சொந்தமானவர்கள்

1 பேதுரு 2:9,10 அவருக்கு சொந்தமான ஜனமாயிருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனமாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிக்கிறீர்கள். இன்று நாம் அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவின் பாடு மரணம், அவரது விலைமதியா இரத்தத்தினாலும் பிசாசின் ஆதிக்கத்திலிருந்து மீட்கப்பட்டிருக்கிறோம்.

“பயப்படாதே! நான் உன்னை மீட்டுக்கொண்டேன்” ஏசாயா 43:1 உன்னை பேர் சொல்லி அழைத்தேன், நீ என்னுடையவன்

1 கொரிந்தியர் 6:19,20 நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல

வென்று அறியீர்களா? நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே!

1 கொரிந்தியர் 7.23 நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே!

யோவான் 15:16 நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை நான் உங்களை தெரிந்து கொண்டேன்.மேற்கண்ட வசனங்களெல்லாம் ஆண்டவராகிய தேவன் நமது உரிமையாளர் என்பதைத் தெளிவு படுத்துகிறது, நும்மைத் தெரிந்து கொண்டு அழைத்த தேவன் இறுதி மட்டும் நம்மை நடத்துவார் என்பதை நாம் அறிந்து நாம் தைரியமாய் இருப்போம்.

**“ உலகம் உன்னை வெறுத்திடலாம் உற்றார் உன்னை துரத்திடலாம் உன்னை அழைத்தவரோ உள்ளங்கையில் ஏந்திடுவார் ”**

என்ற தந்தை பர்க்மான்ஸ் அவர்களின் பாடல் வரிகள் நம் உள்ளத்தில் புது நம்பிக்கையூட்டட்டும்.

ஏசாயா 49:15,16 ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை. இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன், என்ற வேத வசனங்கள் நம் வாழ்க்கையில் தேவனோடு நமக்கிருக்கும் உரிமையை, உறவை வெளிப்படுத்துகிறது.

யோவேல் 2:26 என் ஜனங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டுப் போவதில்லை.

**நாம் அவருடைய ஜனங்கள் அவர் நம்முடையவர் அல்லேலூயா**

## 2 அவர் நமது துணையாளர்

அநேக நேரங்களில் நமது வாழ்க்கையில் போராட்டங்களும் வேதனைகளும் நம்மை சூழும் வேளைகளில் எல்லாம் நாம் மிகவும் தனிமையாய் உணருகிறோம். உதவ யாரும் இல்லையே என ஏங்கித்தவிக்கிறோம், சூழ்நிலைகளினாலே தாக்கப்படுகிறோம். சூழ்நிலைகளை ஆளாமல் ஆனால் சூழ்நிலைகளினாலே ஆளப்படுகிறோம். காரணம் அந்த சூழ்நிலைகளைக்குறித்து அந்த சூழ்நிலைகளிலே கர்த்தர் நமக்காக என்ன செய்கிறார் என்பதையும் நமது செயற்பாடு என்ன என்பதையும் பார்க்கத் தவறி விடுகிறோம். வேதவசனமானது கண்ணாடியைப் போன்றது என வேதாகமத்தில் யாக்கோபு 1:24ல் வாசிக்கிறோம். பல வேளைகளில் நம்மைக் குறித்தும் நம் சூழ்நிலைகளைக் குறித்தும் வேதம் என்ன சொல்லுகிறது என்பதை வாசிக்கிறோம். ஆனால் கண்ணாடியில் தன்னைத் தானே பார்த்து பின்பு தன் சாயல் இன்னதென்பதை மறந்து போகிற மனுஷனைப் போல காணப்படுகிறோம். வாசிக்கும் வசனங்களை இருதயமாகிய கரும்பலகையில் எழுதிவைக்க வேண்டும்.

**ஏசாயா 41:13 பயப்படாதே! நான் உனக்கு துணை நிற்கிறேன்.**
**ஏசாயா 41:13 பயப்படாதே! நான் உன்னோடே இருக்கிறேன்.**

ஏசாயா 50:7 கர்த்தராகிய ஆண்டவர் எனக்கு துணைசெய்கிறார், ஆகையால் நான் வெட்கப்படுவதில்லை. நான் வெட்கப்பட்டு போவதில்லையென்று அறிந்திருக்கிறேன், ஆதலால் நான் என் முகத்தை கற்பாறையைப் போலாக்கினேன்.

மேற்க்கண்ட இரண்டு வசனங்களினூடாகவும் கர்த்தர் நம்மோடு பேசுகிறதைப் பார்க்கிறோம். இதை அப்படியே வெறுமனே வாசித்து விட்டு போவதினால் நமக்கு எந்த பிரயோஜனமும் ஏற்ப்படப் போவதில்லை. மாறாக இதை விசுவாசித்து கர்த்தருக்கு நன்றி செலுத்துவதோடு சூழ்நிலைகள் நமக்கு எதிர் மாறாக தோன்றும்போது இவ்வசனங்களின் பிரகாரம் செயல்பட வேண்டும் சூழ்நிலைகளைப் பார்த்து விசுவாசத்தில் பேச கற்றுக்கொள்ள வேண்டும் அப்போது மாத்திரமே நாம் வெற்றியைக் காண முடியும்.

தேவன் தாமே உங்களோடிருந்து உங்களை அபரிமிதமாய் ஆசீர்வதித்து வெற்றி வாழ்க்கையை கட்டளையிடுவாராக.

**பயப்படாதே! நீ வெட்கப்படுவதில்லை ஏசாயா 54:4**

**இப்படிக்கு**
**அன்பரின் இராஜரீக பணியில்**
**போதகர் TMI சத்தியராஜ்**

# Editor's Desk...



*Dear Brothers & Sisters,*

I bring greetings in the Sweet name of Jesus!

I hope and pray that you all had a lovely summer, as we said in the beginning of this year, this is the year of Victory. Have faith and receive your victory. Remember in Genesis 22:1,2 God tested Abraham and He asked for 4 things,

1. Take your son (he also had another son).
2. Only son (Abraham and Sara waited for so many years to receive this son.)
3. Isaac
4. whom you love.

Abraham had 2 options:

1. Obey – Do whatever God asked him to do. (God's will)
2. Disobey
   (a) Plead God for his own will and wish.
   (b) Offers an alternative plan.
   (c) Runaway from God's will.

But Abraham had 100% faith and obeyed God therefore, he was called as a *"Father of faith and also called as a Friend of God"*. How is your faith level today in your difficult times? Be encouraged and know that Lord our God Jesus will never leave you nor forsake you. Don't look at the circumstances but look at the God Almighty who can change the circumstances.

*Have Faith, Be Victorious, Obey and Be Blessed*
*God bless you*

In His service,
*Pastor Chrishanthy Sathiyaraj*
Bethany Faith Ministries

# JORDAN AMAAN


Having crossed the border from Palestine to Jordan first stop was mount Nebo Siyagha, Memorial of Moses. As Moses did then I had the opportunity to sight the Promised Land from where I stood. Next stop was Madaba which is an ancient town in Jordan. It is well known for its 6th century Mosaic map of the Holy Land in the Greek Orthodox Church of St George. I was surely blessed beyond measures.

It remained a dream until such time I found out that we are heading towards Petra. One of the 7 wonders of the world and yes I witnessed dozens of tombs and constructed or carved structures in various vibrant colours. What an amazing spectacle it was.


Taken as a whole the entire journey was educational and enjoyable; as I thank my Lord Jesus for His goodness in my life, I am thankful to Bethany family for making my dreams come TRUE! You surely live up to your slogan 'The Family U Need'.

*- Nimmie Perera*













# மனிதனின் முதல் பாவம்





– பாஸ்டர் சாம். பி. செல்லத்துரை

மக்கள் பொதுவாக பாவச் செயல்களை மட்டுமே பாவமாகக் கருதுகிறார்கள். ஆனால் பாவம் ஓர் ஆவிக்குரிய நிலை என்றும் வேதம் கூறுகிறது. பாவம் என்றால் என்ன என்பதை அறிந்துகொள்ள, மனிதனுடைய பாவச் செயல்களுக்கும், அவனுடைய பாவ நிலைக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறித்து வேதம் கூறுவதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அதை புரிந்து கொள்ளுவதற்கு, மனிதனுடைய முதல் பாவம் என்னவென்பதைப் புரிந்து கொள்ளுவது அவசியம்.

ஆதாமும் ஏவாளும் செய்த பாவம்தான் என்ன? கொலையா, களவா, விபசாரமா, வேசித் தனமா அல்லது இவைகளைப் போன்ற ஒரு பாவச்செயலா? பாவச்செயல்கள் மட்டுமே பாவம் என்று எண்ணுவோமானால், ஆதாமும் ஏவாளும் எல்லாரையும் விட மிகவும் பரிசுத்தமானவர்கள் என்றே சொல்ல வேண்டும்! ஏனென்றால் இப்படிப் பட்டப் பாவச் செயல்கள் எதையும் அவர்கள் செய்யவில்லை! ஒரு கனியை மட்டுமே புசித்தார்கள்!

அப்படியானால், தேவனுக்கு முன்பாக அவர்கள் பாவிகளானது எப்படி? அவர்களுடைய பாவம்தான் என்ன? ஒருவேளை அந்த மரத்தின் கனி அவர்களை தீட்டுப்படுத்தி, பாவிகளாக்கக்கூடிய தன்மையுடையதாயிருந்ததா? இல்லை!

உண்மையென்னவென்றால், பூமியின் மீதும் அதில் உள்ளவைகள் மீதும் அவர்களுக்கு ஆளுகையும், அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. அவர்கள் பூமி முழுவதையும் ஆண்டு அதிகாரம் செலுத்தும் அதேவேளையில், அந்த ஆளுகையையும் அதிகாரத்தையும் அவர்களுக்குத் தந்த, அவர்களை விடப் பெரியவர் ஒருவர் இருக்கிறார் என்பதை அவர்கள் மறக்காமலிருப்பது அவசியமாயிருந்தது.

**எல்லாவற்றையும் ஆண்டு வந்தாலுங்கூட, அவர்கள் இன்னமும் தேவனுடைய ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் உட்பட்டிருக்கிறார்கள்**

என்பதை அவர்களுக்கு அனுதினமும் நினைவூட்டவே, நன்மை தீமை அறியத்தக்க மரத்தை தோட்டத்தின் நடுவிலே தேவன் வைத்தார். இப்படியாக, அவர்களுடைய வாழ்க்கை தேவனையே மையமாகக் கொண்டிருந்தது.

விலக்கப்பட்ட மரத்தின் கனியைத் தவிர, தோட்டத்திலுள்ள மற்ற எல்லா மரங்களின் கனியையும் புசிக்கலாம் என்ற தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அதைப் புசியாமலிருந்த ஒவ்வொரு நாளும், தேவன் தங்களுக்கு ஆண்டவராயிருக்கிறார் என்பதை அவர்கள் அங்கிகரித்தனர். அவர்களுடைய கீழ்ப்படிதல் அதை வெளிப்படுத்தியது.



ஆகவே பாவம் என்பது, முதலாவதாக, மனிதனுடைய இருதயத்தின் நிலையைக் குறிக்கிறது. இப்படிப் பாவநிலையிலிருக்கும் இருதயத்திலிருந்துதான் பாவச்செயல்கள் வெளிப்படுகின்றன.

விலக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்க வேண்டாம் என்று தேவன் கட்டளையிட்டிருந்தும், அவருடைய வார்த்தையைத் தள்ளிவிட்டு, பிசாசின் பொய்களை அவர்கள் நம்பினார்கள்.

அதன் விளைவாக தேவனைத் தங்கள் வாழ்க்கையிலிருந்து வெளியே தள்ளிவிட்டு, பிசாசை தங்களுக்கு எஜமானாக்கிக் கொண்டார்கள். அவர்கள் தேவனற்றவர்களானது மட்டுமல்லாமல், பிசாசின் அடிமைகளாகவும் மாறிவிட்டார்கள். அதன் விளைவாக, ஆதாமிலிருந்து தோன்றிய மனுவர்க்கம் முழுவதும், தேவனை விட்டுப் பிரிந்து, இன்றுவரை பிசாசின் அடிமைத்தனத்தில் இருந்து வருகிறது.

எல்லோரும் பாவிகள் என்று வேதம் கூறும் போது மனுவர்க்கம் முழுவதும் இவ்விதமான பாவ நிலையில் இருக்கிறது என்பதையே அவ்வாறு சுட்டிக் காண்பிக்கிறது. எல்லோரும் தேவனற்றவர் களாயும், தேவனோடுகூட உறவும் ஐக்கியமும் இல்லாதவர்களாயும் பிறக்கிறார்கள். பிசாசு அவர்களுடைய எஜமானாயிருக்கிறான்; அவனுடைய சுபாவத்தை அவர்கள் பெற்றிருக்கிறார்கள்.




மனிதனுடைய பிரச்சனை பாவச்செயல்களை விட ஆழமானதாக இருக்கிறது. இருதயத்தின் பாவநிலைதான் அவனுடைய உண்மையான பிரச்சனை.

அப்படியானால் பாவச்செயல்களைக் குறித்து என்ன சொல்லலாம்? மனிதனுடைய பிரச்சனை பாவச்செயல்களை விட ஆழமானதாயிருக்கிறது. இருதயத்தின் பாவநிலைதான் அவனுடைய உண்மையான பிரச்சனை. ஆதாமுடைய இருதயத்தில் இருந்த பாவம், அவனை அந்த பாவச்செயலை செய்ய வைத்ததைப் போலவே, மனிதனுடைய இருதயத்திலிருக்கும் பாவம், அவனை பாவச்செயல்களை செய்ய வைக்கிறது. விலக்கப்பட்ட கனியைப் புசித்த அந்த செயல் ஆதாமுடைய இருதயத்தின் நிலையை எப்படி வெளிப்படுத்தியதோ, அதுபோலவே, இன்றைக்கும், மனிதனுடைய பாவச்செயல்கள் அவனுடைய இருதயத்தின் நிலையை வெளிப்படுத்துகிறது.

எனவே, 'மனிதன் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவனாயிருக்கிறான்' என்று வேதம் கூறும்போது, அவன் தேவனை விட்டுப் பிரிந்து, ஆவிக்குரிய விதத்தில் மரித்தவனாய், பாவச் செயல்கள் நிறைந்த வாழ்க்கை வாழ்கிறான் என்பதையே குறிப்பிடுகிறது.

எனவே மனிதனுடைய இருதயத்தில் ஏற்பட்டிருக்கும் பிரச்சனையை கவனிக்கும்வரை, நாம் அவனுடைய உண்மையான பிரச்சனையை கவனிக்க தவறுகிறோம். தேவனை நிராகரித்ததே மனிதனுடைய உண்மையான பிரச்சனை. அதுதான் அவனுடைய பாவம் என்று வேதம் குறிப்பிடுகிறது. அவனுடைய இருதயத்தின் பாவநிலை மாறும்போது அவனுடைய செயல்களும் மாறும். எனவே, மனிதனுடைய பிரச்சனை, அவனுடைய இருதயத்தின் 'பாவம்' (பாவநிலை) தானே தவிர 'பாவங்கள்' (பாவச் செயல்கள்) அல்ல. இந்த பாவத்தின் விளைவு தான் ஆவிக்குரிய மரணம்; அதாவது, தேவனை விட்டுப் பிரிந்திருப்பது.



மனிதன் தன் மனதின் நிலையைக் குறித்தும், சரீரத்தின் நிலையைக் குறித்தும் அதிகமாக அறிந்து வைத்திருந்தாலும், தன்னுடைய ஆவிக்குரிய நிலையைக் குறித்து சரியான அறிவில்லாதவனாய் இருக்கிறான். சரீரத்தையும் மனதையும் நல்ல நிலையில் வைத்திருக்க, தன்னுடைய நேரத்தையும், பணத்தையும், பெலத்தையும், அதிகமாகச் செலவழிக்கும் அவன், தன்னுடைய முக்கிய பகுதியான ஆவியைப் புறக்கணித்து விடுகிறான்.

உதாரணமாக மலர்கள் பூத்து குலுங்கும் அழகிய தோட்டங்களும், பசும் புல்வெளிகளும் சூழ்ந்த ஒரு அழகான வீட்டையும், அதற்குள்ளே அலங்காரமான வேலைப்பாடுகளையும், மிகச்சிறந்த மேசை, நாற்காலி மற்றும் பல சிறப்பான பொருட்களையும் நீங்கள் காணும்போது அது உங்களை பிரமிக்க வைக்கலாம், ஆனால் அந்த வீட்டினுள் வாழும் மனிதன், வியாதியஸ்தானாக, சந்தோஷமில்லாமல், பயத்திலும், குழப்பத்திலும் வாழ்வதைக் கண்டால் வருத்தப்படுவீர்கள். ஏனென்றால், எல்லாம் இருந்தும், அதனால் அவனுக்கு ஒரு பிரயோஜனமும் இல்லாமலிருக்கிறது.

இதைக் குறித்து இயேசு கூறுவதை கவனிப்போம்:



மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?

- மாற்கு 8:36

இன்றைக்கு மனிதனுடைய உண்மையான நிலைமை இதுதான். உணவும், உடையும், உறைவிடமும், அறிவுத்திறனும் இருப்பதால், தான் நன்றாக வாழ்வதாக ஒருவேளை நினைக்கலாம். இந்த உலகத்தில் கிடைக்கக்கூடிய வசதிகளும் இன்பங்களும், தன்னிடத்தில் எந்த குறைவுமில்லை என்ற எண்ணத்தை ஒருவேளை அவனுக்கு ஏற்படுத்தலாம். உண்மையென்னவென்றால், மனிதன் வெளிப்புறமாக உள்ளவைகளை மட்டுமே பார்க்கிறான்; ஆனால் தேவனோ, இருதயத்தைக் காண்கிறவரானபடியால், அவன் தன்னை விட்டுப்பிரிந்து, ஆவிக்குரிய விதத்தில் செத்தவனாயிருக்கிறான் என்கிற அவனுடைய உண்மையான நிலையைக் காண்கிறார்.

இந்த சத்தியத்தின் வெளிச்சத்தில் மனுவர்க்கத்தைப் பார்க்கையில், அவ்வுலகில் பிறக்கும் அனைவரும் பாவத்திற்குட்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. அவர்களுடைய பாவநிலையினிமித்தம் அவர்கள் தேவனுக்கு முன்பாக பாவிகளாயிருக்கிறார்கள். அவர்கள் சரீரப்பிரகாரமாக உயிரோடுதான் இருக்கிறார்கள்; ஆனால் ஆவிக்குரிய பிரகாரமாக மரித்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தான் உயிரோடிருக்கும் செத்தவர்கள்.



# Water Baptism 2018



**Jesus answered, "Truly, truly, I say to you, unless one is born of water and the Spirit, he cannot enter the kingdom of God.**

**John 3:5**

Glory to God in the Highest, and on earth. It was an immense joy to share about our Baptism service which held on 30th June2018. It is a Glorious moment to see 16 of our Brothers and Sisters accepted Jesus Christ as their personal saviour and took Baptism, we rejoice to see what God has done in their lives, they made genuine promises by declaring their faith. This Baptism marks the beginning of their journey with God their first steps in response to God's love.

- Acts 2:38 says,And Peter said to them, "Repent and be baptized every one of you in the name of Jesus Christ for the forgiveness of your sins, and you will receive the gift of the Holy Spirit. Colossians 2:12 New International Version (NIV)
- 12 having been buried with him in baptism, in which you were also raised with him through your faith in the working of God, who raised him from the dead. Matthew 28:19 New International Version (NIV)
- 19 Therefore go and make disciples of all nations, baptizing them in the name of the Father and of the Son and of the Holy Spirit, Luke 3:21-22King James Version (KJV)
- 21 Now when all the people were baptized, it came to pass, that Jesus also being baptized, and praying, the heaven was opened,
- 22 And the Holy Ghost descended in a bodily shape like a dove upon him, and a voice came from heaven, which said, Thou art my beloved Son; in thee I am well pleased.












# Baptism Testimonies

I accepted Jesus Christ as my own saviour and obeyed the word of God and took baptism. I thank God for His Gracious eyes upon me, I'm so happy and thankful to my parents and my spiritual parents.
Glory to God.





Even though I am a daughter of Pastors and born in a Christian family, I heard so many messages since my birth, I was bit away from understanding God, but God touched me one day. So, I committed myself to God and took baptism on my personal confession.



I was bullied in school, in times I even fed up of my life, but God was so gracious to me and touched me and I took baptism I am very grateful to Bethany church, it's not a church but great big extended family.

I had to go through an operation, but our gracious and faithful God helped me in my difficult times where I came to know him personally. So, I committed myself to Him and got baptized halleluiah!





I can't write my testimony in few words not shell version, God has helped me with my visa, to overcome my addiction, marriage and much more. I have no words to thank my Lord Jesus Christ who is same yesterday, today and forever. All Glory to honour to His name. Also, I take this opportunity to thank my Bethany Family.

My father Push paraja was from a Hindu background and got baptized. But he died after one week of his baptism. I thought this is not the God that I wanted to follow but over the years,I continued to attend Bethany Church in Sout hall and found His love and care which was revealed to me. Then on my own I accepted Jesus Christ as my personal savior.





I am from strong catholic back ground, I thought I don't have to take baptism because I have been baptized as a child but reading and learning the word of God, I realized that I have to confess my sins, repent and then get baptism. But my child baptism, I never confessed my sins. I didn't know what is sin. I agreed and understood about water baptism. Then I accepted Jesus Christ and in obedience to His word I took baptism on my own will. I am pleased that I am baptized now. Thank God for now I'm included in God's family.










# Beach Trip



A place that we all enjoy going to is the beach.. It is seen as a place of relaxation because it is normally quiet and peaceful there. To look around you and see the beauty of God's creation of nature at it's finest. The majority of people you ask will say that it is one of their favourite vacation destinations. Not only for the beauty and relaxation but for the sheer entertainment. That is the three reasons we enjoy it as much as we do.

What a wonderful summer 2018! We the Bethany family had a fantastic time at the Bournmoth Beach this year. We had loads of fun like, playing games, chilling on the sand, enjoying eating different kinds of food, children building sand castles and burying each other in deep holes. Not only that swimming, splashing water to each other, fellowship, Selfies and photography. Thank God, we were all safe and sound by the grace of God.











# TESTIMONIES



I give all glory and honour to my God!

My dad took eight months sabbatical leave and I had to leave school. I missed studies for eight months. While I was doing my GCSE examinations, my aunt passed away. Our house became the funeral house where my parents 3 accommodated the family and relatives from abroad. I couldn't study and really thought I will not get through this examination. But I made an effort. But thank God, He who is gracious, merciful, searches our heart helped me to score good results. And now I'm in Advanced Level. He is Awesome and faithful God. I will praise and thank Him all of my days.

*Stephanie*

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம் !

எனக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளார். 2015 ஆம் ஆண்டு நானும் என் கணவரும் பிரிந்து இருந்த நிலையில் குழந்தைகளை வைத்து கொண்டு மிகவும் வேதனைப்பட்டேன், அந்த நேரத்தில் மோர்ட்கஜ் கட்டாததால் வீடு காலி செய்ய வேண்டிய சூழ்நிலை வந்தது. விவாகரத்துக்கும் தள்ளப்பட்டேன். என்ன செய்வது என்று தெரியமால் கண்ணீரோடு அழுது ஜெபித்தேன். அப்போது பெத்தானிய ஆலயத்தை கேள்விப்பட்டு ஆலயத்துக்கு வந்தேன், அந்த நேரத்தில் தான் பாஸ்டர் கிரிஷாந்த்தி கடவுளுடைய தூதனைப் போல என் வாழ்க்கையில் வந்தார்கள். அவர்கள் மூலமாய் ஆண்டவர் அற்புதங்களை செய்தார். இன்று நானும் என் கணவரும், குழந்தைகளும் அதே வீட்டில் வாழ்ந்து வருகிறோம். பின்னும் சோதனைகள் என்னை தொடர்ந்தது, என் மார்பில் கட்டியை கண்டு கேன்சராக இருக்கமோ என்று நினைத்து கவலைப்பட்டேன். டாக்டர்கள் பரிசோதித்து கவலைப்படும் படி ஒன்றுமில்லை என்று சொன்னார்கள். என் இருதயம் மகிழ்ந்து கர்த்தரை துதித்தது, என் வாழ்வில் ஆண்டவர் செய்த அற்புதத்துக்கு அளவே யில்லை. கர்த்தருக்காக நான் எப்போதும் சாட்சியாக வாழ்வேன்.

கர்த்தருக்குள் சகோதரி ஸ்டெல்லா





I would like to thank and praise God for helping me to get into Medical College. God has been with me through every steps of the application process and He has helped me through many people that I am surrounded by. I thank God especially for my family, teachers and friends who have supported me in my studies and helped me to build my confidence. Specially to Bethany family. I'm so honored that God has granted me this opportunity and He is worthy of all the glory. Amen.

*Daviniya*



# ஒரு போதும் மாறிடாத "தேவ அன்பு"

முழு வேதாகமத்திலும் தேவன் மனிதனோடு இடைப்பட்டு எல்லாகிரியைகளிலும் அன்பு என்னும் பதம் தோன்றும் இடத்தை அறிந்திருக்கிறீர்களா ஆபிரகாமிடம் உன் நேச குமாரனாகிய ஈசாக்கை என ஈசாக்கு மீது ஆபிரகாம் வைத்திருந்த அன்பைக் குறிப்பட்டு கூறினார் பலிபீடத்தில் சாக்கை பலியாக ஒப்புக் கொடுக்கும் நிகழ்ச்சியை ஆதியாகமம் 22ல் காண்கிறோம். .

இக்காரியம் கல்வாரியைச் சித்தரிக்கும் மிகச்சிறந்த திருஷ்டாந்தமாக நமக்கு இருக்கிறது. இயேசுவை நம்பாவங் களுக்காக பிதாவானவர் ஒப்புக் கொடுப்பதையே அன்பின் செயல் சித்தரிக்கிறது. ஆண்டவர் இயேசு இந்த உலகத்திற்கு வந்த போது தன்னை கொடுப்பதற்கே யாதொன்றையும் நம்மிடம் கேட்காமல் இறங்கி வந்தார். ஒரு அன்புள்ள கணவன் தன் மனைவியிடம் கையளிப்பது போலவே, தன்னிடமுள்ள யாவற்றையும் நம்மிடம் பகிர்மளிக்கவே ஆண்டவர் விரும்புகின்றார். இன்று அநேகருக்குள்ள அச்சம் என்னையே நான் ஆண்டவருக்கு அர்ப்பணம் செய்து விட்டால் பிறகு அவ்வளவு தான் இந்த ஆண்டவர் என்னிடத்தில் எதையாகிலும் கேட்டுக் கொண்டே இருப்பர். மகிழ்ச்சி என்பதே எனக்கு இருக்காது என்றேதவறாய் எண்ணிக் கொள்கிறார்கள். இப்படி இதே வார்த்தைகளால் நாம் கூறாமல் இருக்கலாம் ஆனால் இன்று அநேகர் ஏன் ஆண்டவருக்கு தங்களை நிபந்தனையற்ற அர்ப்பணமாகத் தருவதில்லை ஏன்? என்ற கேள்விக்கு இதை தவிர வேறு பதிலை நாம் காணமுடிவதில்லை. தன்னிடமுள்ள யாவற்றையும் கொடுப்பதற்கே ஆண்டவராகிய இயேசு வந்தார் என்பதை ஒருவன் மெய்யாக வேலி விசுவாசுத்திருப் பானென்றால் தன் முழு ஜீவியத்தையும் அவருக்கு அர்ப்பணித்து விடுவதற்கு எந்த ஒரு தடையும் அவனுக்கு இருக்காது. ஒரு சமயம் கர்த்தருடைய ஊழியன் ஒருவர் தன் சபையிலுள்ள ஒரு ஏழை விதவை வீட்டிற்கு வாடகை கொடுக்கமுடியாமல் அவதிப்படுவதை அறிந்தார். அவருடைய வாடகைக்கு (கட்டுவதற்கு) தேவையான முழு பணத்தையும் எடுத்துக்கொண்டு அவள் வீட்டிற்கு சென்றார், அவளுடையவீட்டின் கதவை பலமுறை தட்டிப்பார்த்தும் கதவுதிறக்கவில்லை.அதிகநேரம் நின்று கதவைதட்டிய ஊழியர் பதில் ஏதும் வராததால் அங்கிருந்து சென்றுவிட்டார்

சிலநாட்கள் கழித்து அந்த ஏழை விதவையை ஒரு வீதியில் சந்தித்தார், "சகோதரி உங்கள் வாடகைக்கு போதுமான பணத்தை அளிப்பதற்காக நான் உங்கள் வீட்டிற்கு கொண்டுவந்தேன். ஆனால் உங்கள் வீடு பூட்டி யிருந்தது அந்த கதவை தட்டியும் ஒருவரும் திறக்கவில்லை" என்று கூறினார். என்னை மன்னித்து கொள்ளுங்கள் நீங்கள் கதவை தட்டிய அதே சமயத்தில் நான் வீட்டிற்குள் தான் இருந்தேன். வீட்டுச்சொந்தக்காரர் வாடகைப்பணம் வாங்க வந்திருக்கிறார் என்று அஞ்சியே நான் கதவை திறக்காமல் இருந்துவிட்டேன் என கூறினாள். பார்த்தீர்களா! வாடகையை வசூலிப்பதற்காக ஆண்டவர் நம்மிடத்தில் வரவில்லை தன்னிடம் உள்ளவற்றையும் நமக்கு கொடுப்பதற்கே ஆண்டவர் வந்தரர்.

அப்படியிருக்க அவருக்கும் ஆண்டவருடைய அன்புக்கும் கதவை திறவாமல் இருப்பது எத்தனை மதியீனம். அதைவிடப் பெரியமதியீனம் நம் முழு ஜீவியத்தையும் ஆண்டவருக்கு அர்ப்பணிக்காமல் இருப்பது தான் நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர் 5:8 தேவனுடைய அன்பின் சுபாவம் ஒருபோதும் மாறிப்போவதில்லை தன்னுடைய மாறாத அன்பை ஜனங்கள் அறிந்து கொள்ளும் படிக்கேவே தாகமத்தில் ஆண்டவர் தன்னை அடிக்கடி வெளிப் படுத்தியதை நாம் காணக்கூடியதாயுள்ளது. தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று எப்போதுமே அப்போஸ் தனலாகிய யோவான் தன் வாழ்நாளில் பிரசங்கித்துக் கொண்டே இருந்தார் என்பதாக சரித்திரம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் அனைவரும் அவரின் அன்புக்காக இறுதிவரை இரத்தசாட்சியாய் போகுமட்டாக அவரோடுள்ள மாறாத நேசத்திலே பிணைக்கப்பட்டிருந்தனர். உங்கள் வாழ்வும் ஒருபோதும் மாறாத கிறிஸ்துவின் அன்பிலே பிணைந்து, இணைந்து இருப்பதாக.



சகோதரி மெர்சி

# Toddler Group Day Out!







## A Dayout With The Local Community By The Southall Toddler Group


















# The Twentieth Happy Wedding Anniversary of Our Pastors

*"The Lord bless you; the lord make his face shine upon you, and be gracious to you; the Lord lift up his countenance upon you, and give you peace. (Num, 6:26-26)*

*We would like to Bless and Honour –*
*our Founder and Senior Pastor* **TMI Sathiyaraj**
*and* **Pastor Chrishanthy Sathiyaraj**
*on their* **20th Wedding Anniversary** *on 1st of august 2018.*
*As Bethany family we pray to God to bless our shepherd and his family in every way.*

### Special Meeting at Bethany Church With

# Dr.Mrs.Preetha Judson











All Glory to God!

Bethany Church was blessed by a special meeting by Dr. Mrs. **PREETHA JUDSON** (Gift of Jesus Ministries, India) on the18th of August 2018. It was a powerful message about body, soul and spirit. While she was speaking, she encouraged the church by saying the prophecy 'God is taking the church to another level'. There was a special anointing of God and we were all filled with joy and peace.



# வேதாகமப் ? புதிர்

வேதாகமத்தை வாசித்திட அறிந்திட ஆராய்ந்திட அரியதோர் சந்தர்ப்பம்!

வயது வேறுபாடின்றி யாவரும் பங்கு பெறலாம்!

லேவியராகம் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள வேதாகமப் புதிர்களுக்கான விடைகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்......

1. கர்த்தருக்குப் படைக்கும் போஜனபலி எதனால் சாரமாக்கப்பட வேண்டும்?
2. இஸ்ரவேல் புத்திரர் அறியாமல் பாவம் செய்தால், அந்த பாவத்தினிமித்தம் செலுத்தப்பட வேண்டிய மிருகம் எது?
3. கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்தலாம், ஆனால் பலிபீடத்தின் மேல் சுகந்தவாசனையாக தகனிக்கப்படக்கூடாதவை எவை?
4. அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு வந்ததால் செத்துப்போன ஆரோனின் குமாரரின் பெயர்கள் என்ன?
5. கர்த்தரின் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் போகும் போது திராட்சரசத்தையும், மதுவையும் குடிக்க கூடாது என்று எச்சரிக்கப்பட்டவர்கள் யார்?
6. இப்புத்தகத்தின்படி இஸ்ரவேல் புத்திரர் புசிக்கத்தகாத ஜீவஜந்துக்களில் 2 கூறுக.
7. தண்ணீர்களில் உள்ள ஜீவஜந்துக்களில் சிறகும்,-----------இல்லாத யாவும் உங்களுக்கு அருவருப்பாய் இருக்கக்கூடாது.
8. ஆத்துமாவிற்காகப் பாவநிவர்த்தி செய்வது எது?
9. சமாதானபலியை கர்த்தருக்குச் செலுத்தும் போது எப்படிச் செலுத்த வேண்டும்?
10. யாருக்காக, கர்த்தருக்கு படைக்கப்படும் எந்த போஜனபலியும் புசிக்கப்படாமல் முழுவதும் தகனிக்கப்பட வேண்டும்?

# என்னதான் சொல்லவர்ரீங்க !?!?!?



**பெரியதம்பி :**
டேய் Christianity-ல என்னதான்டா சொல்லவர்ரீங்க ?!?!?!

**சின்னதம்பி :**
First of all முதலாவதாக Christianity-யின் நற்செய்தி, “கடவுளின் நண்பனாக வாழமுடியும் ! You Can be God's Friend !" கடவுளுக்கு நம்மள ரொம்ப பிடிக்கும்; நம்மை Bless பண்ணனும், நம்மை help பண்ணனும் என்று அவருக்கு ரொம்ப ஆசை ! அதினாலதான்.....

**பெரியதம்பி :**
அதெப்படிடா கடவுளின் friend-ஆ இருக்கிறது? அவருடைய status-உம் நம்ம range-உம் ஒத்தே போகாதே!

**சின்னதம்பி :**
Yes! மனிதகுலம் கர்த்தருடைய பரிசுத்தத்திற்காக தக்கதாக வாழமுடியல, அதினால தான் இயேசு கிறிஸ்து நம்ம பாவத்திற்கு பரிகாரமா சிலுவையில் மரித்தார்.

**பெரியதம்பி :**
இதையெல்லாம் எப்படிடா நம்புறது? நல்லா reel - விடுற..

**சின்னதம்பி :**
Suppose நீ உனக்கே இஷ்டமில்லாத ஒரு பாவமான காரியத்தை செய்கிற அல்லது சிந்திக்கிற என்று வைத்துக்கொள்வோமே ! பாவம் செய்கிறவன் பாவத்திற்கு அடிமையாகிவிடுகிறான். Sin is addictive. So, "Dear God, எனக்கு help பண்ணுங்க, இந்த பாவத்திலிருந்து விடுதலை தாங்க.I decide to be your friend உங்க நண்பனாக வாழ தீர்மானம் எடுக்கிறேன். Thank you for accepting me. என்னுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தற்காக நன்றி” என்று pray பண்ணி பாரு. Try chatting with JESUS. " Taste and see that the Lord is good. Blessed is the person who trusts in him" கடவுளோடு பழகி பாரு, JESUS will set us free to do the right things. நம்முடைய பாவங்களிலிருந்து விடுதலை தருவார். And this will make your heart so joyful. இது நம்மை சந்தோஷப்படுத்தும்.



பெரியதம்பி :
அப்ப நாம தவறே செய்யமாட்டோமா?

சின்னதம்பி :
பரலோகத்தின் ஏணியின் முதல் படியில் ஏறும் சந்தோஷம் பெரியது. Christian life is journey. இயேசுவின் நண்பனாய் தொடர்ந்து வாழும் போது, பரிசுத்தத்தின் மேல் பரிசுத்தம் அடைகிறோம். Friends chat regularly. அதுபோல இயேசுவோடு உள்ள உறவை வளர்க்க தான் Bible படிக்கிறோம், Church-க்கு போகிறோம், Pray பண்ணுகிறோம்.

பெரியதம்பி :
அப்ப Christianity பொறுத்தளவு சும்மா கண்ணை மூடினால் Prayer, கண்ணை திறந்தால் Bible reading, நடந்தால் Church-க்கு போணுமா?

சின்னதம்பி :
Secondly! இரண்டாவது Point - அ மறக்கக் கூடாது. நம்ம Jesus-ன் friend. ஆக கீழ்படிந்து வாழும் போது அவர் நம்முடைய இருதயத்தில் பரிசுத்த ஆவியானவராக வாசம் செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்முடைய மனச ""God is Love" தேவ அன்பினால் நிரப்புகிறார். அன்பால் நிறைந்த உள்ளம், அன்பை செயலில் வெளிப்படுத்த துடிக்கும். தேவ அன்பை வெளிகாட்டுவதற்கு கர்த்தர் நமக்கு opportunities தருகிறார். அவரின் அன்பின் வாயிலாக இருக்க சம்மதிப்பது நமது Choice and its a privilege.

பெரியதம்பி :
So, இயேசுவின் உண்மை நண்பனாக வாழ்ந்து, அவருடைய அன்பையும், பெலனையும் பெற்று அனுபவித்து, மக்களை நேசித்து தொண்டு செய்யவே Christianity நமக்கு அறிவுறுத்துகிறது அப்படித்தானடா? இப்ப புரியது.

சின்னதம்பி :
Yes!

பெரியதம்பி :
Dear God, Thank you for accepting me. Because of Jesus. I decide to be your friend. Thank you for your forgiveness. Fill my heart with your love. In Jesus Name I ask. Amen.

# Youth Corner

Luke 11:9 (NCV)
'So, I tell you, ask and God will give it to you. Search, and you will find. Knock, and the door will open for you.'

## Ask

This verse spoke to me this month as often in our day to day live its easy for us to try and take control of everything we do. There is a huge difference between what we want and what we need, and it can take a long time to distinguish between the two. Sometimes we have too much pride to ask the Lord what we need but the truth is He already knows. Greed, ambition and desire can overpower our emotions and lure us away from our true purpose in life. That's why in this verse it says 'ask.' This three-letter verb is all we need to do for our compassionate father to give all our hearts desires. We don't need to earn our way to get what we want, like we do in this world, but just simply ask and it shall be given. How great is our God!


## Search

The next line of the verse goes on to say, '**search**' and you will find. I thought about this line for some time and realised its very easy to be influenced by the corrupt world and to search for the wrong things to bring temporary happiness. However, when we alter our mind sets and search for the things that will build us not break us, we will find what we need. Whether it be peace or a materialistic thing, when you ask God to take control, He will provide all your desires.

## Knock

Lastly, '**knock**' and the door will open. Every so often, we feel burdened and discouraged when our plans don't turn out the way we want. One thing I've learnt is that when one door closes, a hundred different doors of opportunity open. God has plans for us that are beyond our imagination. When we submit ourselves to God and let Him take the wheel in our lives, God will make us prosperous and shine for His glory.

Amen



Miss Stephanie Lydia Sathiyaraj



# Bethany Ministries

Be Part Be Blessed Be Blessing

**Sunday Service** — We have Tamil English and Singala service at various timings.

**Intercessory Prayer** — Tuesdays and Thursdays at Bethany House

**Toddler Group** — We have community Toddler Group every Wednesdays and Fridays

**Tamil School** — Study Tamil in Christian environment every Fridays

**Out Reach** — Street Evangelism caring for the world

**Prayer and Fasting** — Prayer is our priority

**Children's Church** — We have a vibrant children church where kids can join and worship God

**Kingdom Kings** — All the kings of Bethany family meet up and pray

**Street Pastors** — We are trained to send people on streets to pray and help the community

**Bethany Woods** — A place owned by Bethany to "Rest In Peace with God"

**esther fellowship** — Once a month our queens and princess of our church meet up and listen the word of God and learn new things

**Bethany Creation** — Youngsters of Bethany family ministers to other by song, dance and dramas.

For more information please visit our website or
Call : Pastor Justin 07837260678. Our Office : 02085712156